DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.38/2023**
**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 31- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | ஓட்டுனர் |
| பெயர் | - | சுகுமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | தாமோதரன் | சமயம் | - | |
| கிராமம் | - | வாழைத்தோட்டம் | வயது | - | 41/2025 |
| சாதி | - | | | | |

**31-07-2025**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டாக்ஸி ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 03-02-2023-ம் தேதி எனக்கு சொந்தமான FZ சிவப்பு நிற TN78U7985 பதிவெண்கொண்ட யமகா இரு சக்கர வாகனத்தினை என் வீட்டில் அருகே உள்ள BLS முன்பு நிறுத்திவைத்துவிட்டு வேலை சம்பந்தமாக வெளியூர் சென்றுவிட்டேன். பின்னர் ஒரு வாரம் கழித்து வண்டியை எடுக்கசென்றபோது வண்டியை காணவில்லை. பின்னர் நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** சுமார் 5 மாதங்களுக்கு பின்னர் எனது இரு சக்கரவாகனம் கிடைக்கப்பட்டதாக தகவல் தெரிவித்தனர். நான் காவல் நிலையம் சென்று எனது இரு சக்கர வாகனத்தை அடையாளம் காண்பித்தேன். அப்போது எனது வண்டியை யார் எடுத்தார் என்று தெரியவில்லை. பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு செய்து இரு சக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் திரும்ப பெற்றுச்சென்றேன். அந்த வாகனத்தை நான் தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இரு சக்கர வாகனம் தான் காணாமல் போன என்னுடைய வாகனம் ஆகும். **(அந்த புகைப்படம் (எண்ணம்-4) அ.சா.ஆ 2 ஆகவும், சிவப்பு நிற FZ பைக் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது) (P.R.42/2023)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான் என்றால் சரிதான். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது இரு சக்கர வாகனத்தை யார் எடுத்தது என்று எனக்கு தெரியாதுஎன்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் அல்ல என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.38/2023**

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 31- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | வீட்டுகுடித்தனம் |
| பெயர் | - | சித்ரா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சுகுமார் | சமயம் | - | |
| கிராமம் | - | வாழைத்தோட்டம் | வயது | - | 31/2025 |
| சாதி | - | | | | |

**31-07-2025**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 சுகுமார் எனது கணவராவார். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக தேதி மாதம் நினைவில் இல்லை. எனது கணவருக்கு சொந்தமான யமகா FZ இரு சக்கர வாகனத்தை வாழைத்தோட்டம் BLS சர்ச் முன்பு நிறுத்திவைத்திருந்ததை காணாமல் போய்விட்டது. எனது கணவர் என்னிடம் கூறினார். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது கணவரின் இரு சக்கர வாகனத்தை யார் எடுத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.